**2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம்,**
**திருவள்ளூர் @ பூந்தமல்லி**

**முன்னிலை : திருமதி.கு.புவனேஸ்வரி, பி.எல்.,**
**2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, திருவள்ளூர் @ பூந்தமல்லி**

**2025 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 10 ஆம் நாள் புதன்கிழமை**

**இ.ம.எண்.1/2024 ன் அசல் வழக்கு எண்.283/2019**

திருமதி. பச்சையம்மாள்

...மனுதாரர்/வாதி

..எதிர்..

1. திரு. சந்திரசேகரன்
2. திருமதி. பிரமிளா
3. திருமதி. வசந்தகுமாரி
4. திரு. R. ஆகாஷ்

1 முதல் 4 எதிர்மனுதாரர்கள் /
1 முதல் 4 பிரதிவாதிகள்

5. திரு. M. விநாயகம்
6. திரு. நாதமுனி
7. திரு. ஏகாம்பரம்
8. திரு. ஏழுமலை

... 5 முதல் 8 எதிர்மனுதாரர்கள்/
5 முதல் 8 உத்தேச தரப்பினர்கள்

இம்மனு 18.11.2025 அன்று இந்நீதிமன்றம் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர்கள் திரு. S. நிசார் அகமது மற்றும் D. சரவணன் ஆகியோர் ஆஜராகியும்,

G BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI
Date: 2025.12.22 15:12:56 +0530

1 முதல் 4 எதிர்மனுதாரர்கள் / 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் M/s. N. உதயகுமார், U. கௌரி சங்கர் மற்றும் S. நேதாஜி ஆகியோர் ஆஜராகியும், 5 முதல் 8 எதிர்மனுதாரர்கள்/5 முதல் 8 உத்தேச தரப்பினர்களை அழைத்தும் ஆஜரின்மையால் தோன்றாத்தரப்பினராக்கப்பட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இருதரப்பு வாதுரைகளைக் கேட்டும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலும் இருந்து வந்ததில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**உத்தரவு**

இம்மனு மனுதாரர்/வாதி தரப்பில் உரிமையியல் விசாரணை முறைச்சட்டம் கட்டளை 1 விதி 10(2) பிரிவு 151ன் கீழ் 5 முதல் 8 எதிர்மனுதாரர்கள்/5 முதல் 8 உத்தேச தரப்பினர்கள் அசல் வழக்கில் 5 முதல் 8வது பிரதிவாதிகளாக சேர்க்க உத்தரவிட கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுதாரர்/வாதி தாக்கல் செய்த மனுவின் சுருக்கம்**:–

மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். உத்தேச தரப்பினரான மாணிக்கத்தின் மகன் விநாயகத்திற்கு அவரது குடும்ப உறுப்பினர்கள் எந்த உரிமை அல்லது தகுதியும் இல்லாமல், 23–7–2018 தேதியிட்டு ஆவண எண்.10206/2018 மூலம் செயல்படுத்தப்பட்ட செட்டில்மெண்ட் பத்திரத்தை சட்டவிரோதமாக உருவாக்கியுள்ளனர். அந்த ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கது அல்ல மற்றும் மனுதாரரை கட்டுப்படுத்தாது. சொல்லப்பட்ட விநாயகம் குறிப்பிடப்பட்ட சொத்தின் மீது எந்த உரிமை, தகுதி அல்லது ஆர்வமும் கொண்டிருக்கவில்லை. இந்த வழக்கில்

G BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI
Date: 2025.12.22 15:13:05 +0530

பிரதிவாதிகள் ஒன்றிணைந்து, ஒருவருக்கொருவர் சூழ்ச்சி செய்து, பூவிருந்தவல்லி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.115/2023 என்ற தொந்தரவான வழக்கை தாக்கல் செய்தனர், மேலும் அது 24–1–2024 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது. இராஜேந்திரனின் மனைவியாக, மனுதாரர் சொல்லப்பட்ட சொத்தில் பங்கு பெற தகுதியுடையவர். எனவே, சரியான தீர்ப்புக்காக மனுதாரத் வழக்குரையை திருத்துவது நியாயமானது மற்றும் அவசியமானது. குறிப்பிட்ட விநாயகம், அவரது தாய் மற்றும் சகோதரர்கள் வழக்கின் சரியான மற்றும் அவசியமான தரப்பினர் ஆவர். அவரது தாய் சந்திரா 2 ஆண்டுகளுக்கு முன்பு, அவரது மகன்கள் விநாயகம், நாதமுனி, ஏகாம்பரம் மற்றும் எழுமலை ஆகியோரை விட்டுச்சென்றார். எனவே, 5 முதல் 8 உத்தேச தரப்பினர்களை அசல் வழக்கில் 5 முதல் 8 பிரதிவாதிகளாக சேர்க்கப்பட வேண்டும்.

3. <u>1 முதல் 4 எதிர்மனுதாரர்கள்/1 முதல் 4 பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்:–</u>

மனுதாரர்/வாதி இப்போது இணைக்க முயல்கின்ற ஒரு விநாயகம் என்பவர், முன்னதாக பூந்தமல்லி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் இரண்டாம் பிரதிவாதிக்கு எதிராக அசல் வழக்கு எண்.115/2023 என்ற வழக்கைத் தாக்கல் செய்திருந்தார். அந்தச் சொத்தில் தனக்கு எந்த உரிமையும் இல்லை என்பதை உணர்ந்த, அவர் பின்னிட்டு அந்த வழக்கை திரும்பப் பெற்றுக்கொண்டார். அந்த வழக்கு 24.01.2024 அன்று வலியுறுத்தப்படாததால் 'தள்ளுபடி செய்யப்பட்டது. இந்த உண்மையை மனுதாரர்/வாதியும் ஒப்புக்கொண்டுள்ளார். குறிப்பிட்ட நடவடிக்கைகள் மற்றும் முடிவு பற்றிய அறிவு மனுதாரருக்கு இருந்தும், அவர் இப்போது

G
BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI
Date: 2025.12.22 15:13:11 +0530

இந்தப் பிரச்சினையை மீண்டும் திறக்கவும், அந்நியர்கள் மற்றும் பிரதிவாதிகளுக்கு எந்த குடும்ப உறவும் இல்லாத தரப்பினரை இணைக்க முயற்சிப்பதன் மூலம் தற்போதைய பகிர்வு வழக்கை தேவையற்ற முறையில் சிக்கலாக்கவும் முயல்கிறார். இந்த மனு நடவடிக்கைகளை நீடிப்பதற்கும், பிரதிவாதிகளைத் தொந்தரவு செய்வதற்குமே உத்தேசிக்கப்பட்டது. உத்தேச தரப்பினர்கள் தற்போதைய வழக்கின் தீர்ப்பிற்கு தேவையானவர்களுமல்ல, பொருத்தமானவர்களுமல்ல. கோரப்பட்ட பகிர்வு தீர்வானது பக்தவச்சல நாயுடுவின் சட்டபூர்வ வாரிசுகளுக்கு மட்டுமே தொடர்புடையது, அந்நியர்களுக்கு அல்ல. எனவே இந்த மனுவை செலவுத்தொகையுன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

**4.** 5 முதல் 8 எதிர்மனுதாரர்கள்/ 5 முதல் 8 உத்தேச தரப்பினர்களை அழைத்தும் ஆஜரின்மையால் 07.10.2025 அன்று தோன்றாத்தரப்பினராக அறிவிக்கப்பட்டார்.

**5. <u>தீர்வு செய்யப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்</u>:–**

இந்த மனு மனுதாரரால் கோரப்படும் பரிகாரம் அனுமதிக்கக் கூடியதா? என்பதாகும்.

**6.** இருதரப்பிலும் எவ்வித வாய்மொழி சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.

**<u>பிரச்சனை:–</u>**

**7.** இருதரப்பும் கேட்கப்பட்டது ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். மனுதாரர்/வாதி பாகப்பிரிவினை மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்த அசல் வழக்கானது எழுவினாக்கள் வனையப்படுவதற்காக நிலுவையில்

G
BHUVANESWARI

Digitally signed by G BHUVANESWARI
Date: 2025.12.22 15:13:16 +0530

இருந்து வருகிறது. இந்நிலையில் மனுதாரர் இந்த மனுவை தாக்கல் செய்து உத்தேச தரப்பினரான மாணிக்கத்தின் மகன் விநாயகத்திற்கு அவரது குடும்ப உறுப்பினர்கள் எந்த உரிமை அல்லது தகுதியும் இல்லாமல், 23-7-2018 தேதியிட்டு ஆவண எண்.10206/2018 மூலம் செயல்படுத்தப்பட்ட செட்டில்மெண்ட் பத்திரத்தை சட்டவிரோதமாக உருவாக்கியுள்ளதாகவும், அந்த ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கது அல்ல மற்றும் மனுதாரரை கட்டுப்படுத்தாது என்றும் எனவே, 5 முதல் 8 உத்தேச தரப்பினர்களை அசல் வழக்கில் 5 முதல் 8 பிரதிவாதிகளாக சேர்க்கப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ள பொருண்மைகள் 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள்/1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் மறுத்துரைக்கப்பட்டு மனுதாரர்/வாதி தரப்பினராக சேர்க்க கோரும் ஒரு விநாயகம் என்பவர், முன்னதாக பூந்தமல்லி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் இரண்டாம் பிரதிவாதிக்கு எதிராக அசல் வழக்கு எண்.115/2023 என்ற வழக்கைத் தாக்கல் செய்திருந்ததாகவும் அந்தச் சொத்தில் தனக்கு எந்த உரிமையும் இல்லை என்பதை உணர்ந்து, அந்த வழக்கை வலியுறுத்தாததால் 24.01.2024 அன்று 'தள்ளுபடி செய்யப்பட்டதாகவும் இந்த உண்மையை மனுதாரர்/வாதி ஒப்புக்கொண்டுள்ள போதிலும் பிரதிவாதிகளுக்கு எந்த குடும்ப உறவும் இல்லாத தரப்பினரை இணைக்க முயற்சிப்பதன் மூலம் தற்போதைய பகிர்வு வழக்கை தேவையற்ற முறையில் சிக்கலாக்க முயல்வதாகவும் உத்தேச தரப்பினர்கள் தற்போதைய வழக்கின் தீர்ப்பிற்கு தேவையானவர்களல்ல என்றும் ஆட்சேபனை செய்யப்பட்டுள்ள போதிலும் அசல் வழக்கானது பாகப்பிரிவினை மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் வழக்கின்

G BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI
Date: 2025.12.22 15:13:21 +0530

தன்மையை கருத்தில் கொண்டும் அசல் வழக்கில் முழுமையான தீர்வு காணும் வகையிலும் பல்வகை நடவடிக்கைகளை தவிர்க்கும் பொருட்டும் நீதியின் நலன் கருதியும் மனுவை அனுமதிப்பது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவில், இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினிமயமாக்கப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 10 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

G BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI
Date: 2025.12.22 15:13:27 +0530

**2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**திருவள்ளூர் @ பூந்தமல்லி**

**<u>இருதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>– இல்லை**

G BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI
Date: 2025.12.22 15:13:31 +0530

**2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**திருவள்ளூர் @ பூந்தமல்லி**

<u>வரைவு/தெளிவு  உத்தரவு</u>
**இ.ம.எண்.1/2024 ன்**
**அசல் வழக்கு எண்.283/2019**
**நாள் 10.12.2025**
**2 வது சகூ.மா.அ.நீ., பூந்தமல்லி.**